# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 25.02.2026 |
| Case No. | : **O.S.494/2019** | Nationality | : Indian |
| Name | : சதீஷ்குமார் | Religion | : |
| Father's/Husband's Name | : ராமலிங்கம் | Age | : 48 |
| Village | : துகிலி | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

<u>பி.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு விபரம் எனக்கு தெரியும். வயலை மறித்துள்ளதாக வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்திற்கு ஏற்பட்ட ஏ- ரிஜிஸ்டரில் கோவிந்தராஜ் பெயர் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு ஏற்பட்ட அடங்கல் ஜெயலெட்சுமி பெயரில் உள்ளது என்றால் ஜெயலெட்சுமி யார் என்று தெரியாது. என்னிடம் காட்டடப்படும் பேப்பரை எனக்கு படிக்க தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரம் எனக்கு தெரியும். தற்போது எனக்கு கண்ணில் கோவிட்டிற்கு பின்பு பிரச்சனையாக இருப்பதால் வாசிக்க முடியவில்லை. தாவா சொத்திற்கு வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை கோவிந்தராஜ் கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் தெரியும் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞரை வைத்து வழக்கை நடத்தி வருகிறேன்

என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆசிரியர் வேலைக்கு சென்றபோது நான் பிறக்கவில்லை. எனது தகப்பனார் 1967 ல் பணியில் சேர்ந்துள்ளார் என்றால் கேள்வி பட்டுள்ளேன். கோவிந்தராஜ் 1960 ல் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் கோவிந்தராஜ் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 29/2021 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சிட்டா தாக்கல் செய்துள்ளேன். ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு எனது தகப்பனார் செலவு செய்தார் என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள்தான் செலவு செய்தோம். நான் பயிர்கடன் வாங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு வங்கியில் பெற்ற கடனுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் பட்டா மாறுதல் செய்தவரை மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று முதன்மை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். தாவா சொத்துக்கள் கோவிந்தராஜின் சுய சம்பாத்திய கிரய சொத்து என்றாலும் அவர் இறக்கும் வரையில் அனுபவம் செய்து வந்தார் என்றாலும் அவர் இறந்த பிறகு கோவிந்தராஜின் வாரிசுகளான வாதிகள் பெயருக்கு பட்டா ஏற்பட்டு வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் வாதிகள் சாகுபடி செய்த வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. எனக்கும் எனது தகப்பனாருக்கும் தாவா சொத்தில் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றாலும் கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றாலும் சரியல்ல. நான்தான் வாதிகளுக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க

எண்ணி இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).